www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

12 ஆம் வகுப்பு

பதிவு எண் | | | | | |

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2023

## PART - III

## பொருளியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பெருக்கியின் மதிப்பு =

(அ) $\frac{1}{(1-MPC)}$ (ஆ) $\frac{1}{MPS}$

(இ) $\frac{1}{MPC}$ (ஈ) (அ) மற்றும் (ஆ)

**2.** 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை _____ ஆக பயன்படுத்தப்படுகிறது.

(அ) பன்மை

(ஆ) ஒருமை மற்றும் பன்மை

(இ) ஒருமை

(ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

**3.** பொதுக்கடனைத் திரும்பச் செலுத்தும் முறை:

(அ) மூழ்கும் நிதி

(ஆ) பகுதியாகச் செலுத்துதல்

(இ) கடனை மாற்றுதல்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**4.** நீடித்த வளர்ச்சி அல்லது வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் :

(அ) 2030 (ஆ) 2020

(இ) 2050 (ஈ) 2025

**5.** பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் :

(அ) அங்காடி கோட்பாடு

(ஆ) விலை கோட்பாடு

(இ) நுண்ணியல் கோட்பாடு

(ஈ) வருவாய் கோட்பாடு

**6.** நிதிக்குழு நிர்ணயம் செய்வது :

(அ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்

(ஆ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்

(இ) இந்திய அரசின் நிதியினை

(ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

**7.** கீழ்க்கண்டவைகளில் எதனை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாகக் கூற முடியாது?

(அ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது

(ஆ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்

(இ) முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது.

(ஈ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்

**8.** சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை _____

(அ) சந்தைப் பொருட்கள்

(ஆ) சந்தையிடா பொருட்கள்

(இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்

(ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

**9.** வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது _______

(அ) அங்காடி விதி

(ஆ) குறைந்த செல் விளைவு விதி

(இ) நுகர்வு விதி (ஈ) தேவை விதி

**10.** 2016-ன் பணமதிப்பு நீக்கம் _____ மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

(அ) ₹1000 மற்றும் ₹2000

(ஆ) ₹200 மற்றும் ₹500

(இ) ₹500 மற்றும் ₹1000

(ஈ) மேற்சொன்னவை அனைத்தும்



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**11.** முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ________ ஆகும்.

(அ) இந்தியா (ஆ) ரஷ்யா

(இ) சீனா (ஈ) அமெரிக்கா

**12.** நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்:

(அ) National Institute for Tomorrow's India

(ஆ) National Institute for Transport in India

(இ) National Institution for Transforming India

(ஈ) National Institute for Trade in India

**13.** பெனிலக்ஸ் (BENELUX) என்பது ________ ன் வடிவமாகும்.

(அ) பொது சந்தை

(ஆ) தடையற்ற வர்த்தகப் பகுதி

(இ) சுங்கவரி ஒன்றியம்

(ஈ) பொருளாதார ஒன்றியம்

**14.** MV என்பது ______

(அ) வங்கி பண அளிப்பு

(ஆ) பணத் தேவை

(இ) மொத்த பண அளிப்பு

(ஈ) சட்டபூர்வ பண அளிப்பு

**15.** தொன்மைக் கோட்பாட்டின்படி வட்டி வீதம் ________ க்கான வெகுமதி.

(அ) மூலதனம் (ஆ) முதலீடு

(இ) சேமிப்பு (ஈ) தேவை

**16.** நீண்ட காலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ________ மாற்றமாகும்.

(அ) தொழில் (ஆ) நிதி

(இ) கட்டமைப்பு (ஈ) வேளாண்மை

**17.** PQLI என்பது ________ -ன் குறியீடு ஆகும்.

(அ) பொருளாதார முன்னேற்றம்

(ஆ) பொருளாதார வளர்ச்சி

(இ) பொருளாதார மேம்பாடு

(ஈ) பொருளாதார நலன்

**18.** விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது:

(அ) ஜுன் 1, 1963 (ஆ) ஜுன் 3, 1963

(இ) ஜுலை 1, 1963 (ஈ) ஜுலை 3, 1963

**19.** ஐபிஆர்டி ________ என்றும் அழைக்கப்படுகிறது.

(அ) ஆசியான்

(ஆ) பன்னாட்டு பண நிதியம்

(இ) பன்னாட்டு நிதி கழகம்

(ஈ) உலக வங்கி

**20.** பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ______ என அழைக்கிறோம்.

(அ) மீட்சி (ஆ) பூரிப்பு

(இ) வணிகச் சுழற்சி (ஈ) பின்னிறக்கம்

## பகுதி - II

**குறிப்பு :** ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் **வினா எண். 30-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7 × 2 = 14**

**21.** பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.

**22.** GDP குறைப்பான் – இலக்கணம் தருக.

**23.** சே விதியில் ஏதேனும் நான்கு எடுகோள்களைப் பட்டியலிடுக.

**24.** பெருக்கி – வரையறுக்கவும்.

**25.** பணத்தின் இலக்கணம் வரைக.

**26.** CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.

**27.** அயல்நாட்டு செலுத்து நிலை பற்றி நீவிர் அறிவது யாது?

**28.** எங்கு மற்றும் எப்போது சார்க் தலைமை அலுவலகம் துவங்கப்பட்டது?

**29.** பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளைப் பட்டியலிடுக.

**30.** விவரிப்புப் புள்ளியியலுக்கும், உய்த்துணர்வு புள்ளியியலுக்கும் உள்ள வேறுபாடுளை எழுதுக.

## பகுதி - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7 × 3 = 21**

**31.** சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.

**32.** காரணி செலவில் NNP- குறிப்பு வரைக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**33.** தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.

**34.** தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

**35.** தேவை – இழுப்பு மற்றும் செலவு – உந்து பண வீக்கத்தினை விளக்குக.

**36.** நபார்டின் பணிகள் யாவை?

**37.** பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக.

**38.** பிரிக்ஸ் மாநாடு 2018-ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.

**39.** புள்ளியியலின் பணிகள் யாவை?

**40.** சரத்து 269-ன்படி மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் எவையேனும் மூன்றினைப் பட்டியலிடுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7 × 5 = 35**

**41.** (அ) முதலாளித்துவம், சமத்துவம் மற்றும் கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் பல்வேறு முறைகளை விளக்குக.

**42.** (அ) வேலையின்மைகளின் வகைகளை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

**43.** (அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

**44.** (அ) பணத்தின் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உள்நாட்டு வாணிகத்திற்கும், பன்னாட்டு வாணிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

**45.** (அ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை?விளக்குக.

**46.** (அ) GST என்றால் என்ன? அதன் நன்மைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நில மாசுவிற்கான காரணங்கள் யாவை? அதற்கான தீர்வுகளைக் குறிப்பிடுக.

**47.** (அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் X -ன் தேவை | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| பொருள் Y -ன் விற்பனை | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

(அல்லது)

(ஆ) பொதுநிதியியலின் எல்லைகளை விளக்குக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## விடைகள்

### பகுதி - I

1. (ஈ) (அ) மற்றும் (ஆ)
2. (ஆ) ஒருமை மற்றும் பன்மை
3. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. (அ) 2030
5. (ஈ) வருவாய் கோட்பாடு
6. (அ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
7. (அ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது
8. (ஆ) சந்தையிடா பொருட்கள்
9. (அ) அங்காடி விதி
10. (இ) ₹500 மற்றும் ₹1000
11. (ஈ) அமெரிக்கா
12. (இ) National Institution for Transforming India
13. (இ) சுங்கவரி ஒன்றியம்
14. (ஈ) சட்டபூர்வ பண அளிப்பு
15. (இ) சேமிப்பு
16. (இ) கட்டமைப்பு
17. (ஈ) பொருளாதார நலன்
18. (இ) ஜுலை 1, 1963
19. (ஈ) உலக வங்கி
20. (இ) வணிகச் சுழற்சி

### பகுதி - II

21. ■ மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.
■ பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவற்றுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர்.
■ மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

22. GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்றக் குறியீட்டெண் ஆகும்.
இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

23. ■ ஒரு தனி வாங்குபவரோ, விற்பவரோ அல்லது உள்ளீடு பொருளோ விலையை மாற்ற முடியாது.
■ முழு வேலை நிலை நிலவும்.
■ உழைப்பு, பண்டங்கள் ஆகியவற்றின் அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவும்.
■ கூலியிலும் விலையிலும் நெகிழ்வுத் தன்மை உண்டு.

24. ■ நாட்டு வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என வரையறுக்கலாம்.
■ ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், ΔY என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது. எனவே,

$$\text{பெருக்கி (K)} = \frac{\Delta Y}{\Delta I}$$ என உள்ளது.

25. "பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம்" என்று வாக்கர் கூறுகிறார்.

(அல்லது)

"பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவியாகவும், மதிப்பளவை, மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்" என்று கிரௌதர் கூறுகிறார்.

26.

| | ரொக்க இருப்பு விகிதம் (CRR) | சட்டப்படியான நீர்மை விகிதம் (SLR) |
|---|---|---|
| ■ | வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும். | சட்டப் படியான விகிதமான இதில், வங்கிகள், தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம், ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மைத் தன்மை கொண்ட சொத்துக்கள் ஆகும். |
| ■ | ரொக்க இருப்பு விகிதத்திற்கும் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவிற்கும் எதிர்மறைத் தொடர்பு உள்ளது. | இது கேட்பு வைப்பு மற்றும் கால வைப்பு போன்ற வங்கியின் பொறுப்புக்களின் ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவிற்கு இருக்க வேண்டும். |

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



27. ■ ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிமாற்ற அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை என்கிறோம்.

■ இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.

■ நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம், பணம் போன்றவையும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது.

28. சார்க் தலைமை அலுவலகம் நேபாள தலைநகரத்தின் காட்மண்டில் ஜனவரி 16, 1987இல் செயல்படத் துவங்கியது.

29. ■ மக்களின் அடிப்படை தேவைகளையும் கூட்டுத் தேவையையும் நிறைவு செய்வதை சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது.

■ நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் நலவாழ்வு, கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

30.

| | விவரப் புள்ளியியல் | உய்த்துணர்வு புள்ளியியல் |
|---|---|---|
| ■ | ஆய்வில் உள்ள முழுத் தொகுதியையும் விளக்குகின்றது. | மாதிரி ஆய்வின் அடிப்படையில் முழுத்தொகுதி பற்றி முடிவெடுக்கப்படுகின்றது. |
| ■ | புள்ளி விவரங்களை வரைபடங்களாகவும் விளக்கப் படங்களாகவும் வழங்குகின்றது | கருதுகோள்களை சோதனை செய்து கணிக்கின்றது. |
| ■ | புள்ளி விவரங்களின் சுருக்கங்களைத் தருகின்றது. | மாதிரியைத் தாண்டி முழுத் தொகுப்பினை அறிந்து கொள்ள பயன்படுகின்றது. |

## பகுதி - III

31. ■ **சிவப்பு நாடா முறையும் அரசு அலுவலர்களும் (அதிகார வர்க்கம்) :** அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அரசு அலுவலர்கள் பலரின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேசையிலிருந்து மற்றொன்றுக்கு செல்லும் கால அளவு அதிகமாகிறது. இதனால் சிவப்பு நாடா முறை ஏற்படுகிறது.

■ **ஊக்கமில்லாமை :** சமதருமத்தின் மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை எனவே, உற்பத்தித் திறனும் பாதிக்கப்படும்.

■ **தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு:** பண்டங்கள், பணிகள் நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

■ **அதிகாரம் குவிதல் :** அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. எனவே, அரசே மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்படுகிறது. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பாகவும் அமைகிறது.

32. ■ நிகர நாட்டு உற்பத்தி என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பு ஆகும்.

■ காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும்.

■ காரணி செலவில் நிகர நாட்டு வருமானத்தை பெறுவதற்கு, அங்காடி விலையில் NNP யின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும். மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.

■ காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்.

33. ■ உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவையாகும்.

**தொகு தேவையின் நான்கு பகுதிகளைக் (உட்கூறுகளை) கொண்டது :**

■ நுகர்வுத் தேவை ■ முதலீட்டுத் தேவை

■ அரசுச் செலவு ■ நிகர ஏற்றுமதி – இறக்குமதி (Export - Import)

■ **தொகு தேவையின் சூத்திரம் :** AD = C + I + G + (X – M)

www.Padasalai.Net
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**34.**

| | தன்னிச்சையான முதலீடு | ஊக்குவிக்கப்பட்ட முதலீடு |
|---|---|---|
| ■ | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| ■ | வருவாயைப் பொறுத்து நெகிழாதது | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது. |
| ■ | நல நோக்கமுடையது. | இலாப நோக்கமுடையது. |

**35.** ■ **தேவை – இழுப்பு பணவீக்கம் :** அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பண்டங்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது. இது தேவை - இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

■ **செலவு – உந்து பணவீக்கம் :** உற்பத்தியில் மூலப்பொருட்கள், இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்ற பொழுது உற்பத்திச் செலவு கூடி பண்டங்களுக்கான விலை அதிகரிக்கின்றது. இவ்வகை பணவீக்கம் செலவு – உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

**36.** ■ நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்திக்காகவும் முதலீட்டுக்காகவும், வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.

■ இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் ஏற்பளிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.

■ கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

■ மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது வேளாண்மை, ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடனை அளிக்கிறது.

■ மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு, மைய, மாநில அரசுகளின் – சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து வருகிறது.

■ நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள், துவக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியைச் செய்கிறது.

■ வேளாண்மைக்கும் ஊரக வளர்ச்சிக்குமான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

**37.** ■ **பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்:** பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

■ **தூய வணிகக் கோட்பாடு :** நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பண்டங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை விவரிக்கும் பிரிவை தூய வாணிப கோட்பாடாகும்.

■ **கொள்கைச் சச்சரவுகள் :** நாடுகளுக்கிடையேயான வாணிக உறவுகளைக் கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வணிகத்தை அனுமதிப்பதா போன்றவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது.

■ **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும் :** இந்தப் பிரிவு பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவாதிக்கிறது.

■ **பன்னாட்டு நிதியும் வணிக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும் :** பன்னாட்டுப் பண நிதியம், மறு கட்டமைப்பு, பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி), உலக வாணிக நிறுவனம், வாணிகம், பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு முதலான பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை விவரிக்கிறது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**38.** ■ பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜுலை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- ■ உள்ளடக்கிய வளர்ச்சி
- ■ வாணிகச் சிக்கல்கள்
- ■ உலகளாவிய அரசு நிருவாகம்
- ■ பகிரத்தக்க வளமை
- ■ நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

**39.** **புள்ளியியலின் பணிகள் :**
- ■ புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
- ■ இது பரந்த விவரங்களைச் சுருக்கித் தருகிறது.
- ■ இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- ■ இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.
- ■ இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- ■ கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**40.** ■ வேளாண் நிலம் தவிர்த்த இதர சொத்துகள் மீதான வரி.
- ■ பண்ணை வரி (வேளாண்மை நிலம் தவிர்த்து).
- ■ இரயில்வே கட்டணங்கள், சரக்கு கட்டணங்கள்.
- ■ பங்கு அங்காடி மற்றும் எதிர்கால அங்காடி பரிமாற்றங்களால் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
- ■ செய்தித்தாள் மீதான வரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
- ■ இரயில், கடல் வழி, வான் வழியாகச் செல்லும் பயணிகள், சரக்குகள் மீதான வரி.
- ■ மாநிலங்களுக்கிடையேயான பண்டங்கள் விற்பனை, வாங்குதல் மீதான வரி (செய்தித்தாள் தவிர).

## பகுதி - IV

**41.** (அ)

| | தன்மைகள் | முதலாளித்துவம் | சமதருமப் பொருளாதாரம் | கலப்புப் பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| ■ | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் உரிமையும் பொதுத்துறை உரிமையும் |
| ■ | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலனும் இலாப நோக்கமும் |
| ■ | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| ■ | அரசின் பங்கு | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| ■ | வருமானப் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| ■ | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியாரும் அரசு நிறுவனங்களும் |
| ■ | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| ■ | முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை | சமமின்மையும் திறனின்மையும் |

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(அல்லது)

(ஆ) ■ நாட்டு வருமானத்தை மூன்று முறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம். அவை,

- உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் முறை.
- வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும் செலவு முறை.

**உற்பத்தி முறை :**

- உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒரு துறையின் வெளியிடு பொருள் மற்றொரு துறையின் உள்ளிடு பொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.
- இதற்கு இருமுறைக் கணக்கிடல் எனப் பெயர். இதனைத் தவிர்க்க வினை முடிந்தப் பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**வருமான முறை :**

- வருமான முறை என்பது நாட்டு வருமான கணக்கிடலைப் பகிர்வு பகுதியிலிருந்து அணுகுகிறது.
- உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம்.
- வருமான முறையானது, காரணிகள் ஈட்டும் வருமான முறை எனவும் அழைக்கப்படுகிறது.

**செலவு முறை :**

- இம்முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
- தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டுப் பொருள் வாங்கும் செலவு, நிகர ஏற்றுமதி முதலான அனைத்துச் செலவுகளையும் கூட்டி செலவு முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

$$GNP = C + I + G + (X - M)$$

**42.**

(அ) ■ வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிமனிதர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

- **வணிகச் சுழல் வேலையின்மை :** கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை என்று பெயர்.
- **பருவகால வேலையின்மை :** ஓர் ஆண்டில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்கள் கரும்பு, பருத்தி முதலானவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் நடைபெறும்.
- **தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை :**
  உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
- **கற்றோர் வேலையின்மை :** சில நேரங்களில் படித்துக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.
- **தொழில் நுட்ப வேலையின்மை :** புதிய தொழில்நுட்பம், மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

- **அமைப்புசார் வேலையின்மை :** சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (eg. Type Machine, Tape recorder, Radio, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல், இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்குக் காரணமாகிறது.
- **மறைமுக வேலையின்மை :** தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும்.

(அல்லது)

(ஆ)

| | மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEI) |
|---|---|---|
| ■ | இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொருத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையைத் தூண்டும் மாற்றத்தைப் பொருத்து அமைகிறது. |
| ■ | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| ■ | வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| ■ | இது ஒரு "இருப்பு" கருத்துரு (Stock). | இது ஒரு தடையா ஓட்டக் (Flow) கருத்துரு. |
| ■ | ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**43.**

(அ) ■ "உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம், விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்; ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது".

- இந்த விதி மனிதர்கள் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.

**ஊகங்கள் :**

- மற்றவை மாறாது.
- சுமூகமான சூழல் நிலவுகிறது.
- முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

**விதியின் கருத்துக்கள் :** இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.


- வருமானம் உயரும்போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.
- அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகிறது.
- அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வையும், சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும். இவ்விதியின் மூன்று கருத்துக்களும் அட்டவணை உதவியுடன் விளக்கப்படுகிறது.
- **கருத்துரை (1) :** வருமானம் ₹60 கோடிகளாக அதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு ₹50 கோடிகளாக அதிகரிக்கிறது.
- **கருத்துரை (2) :** அதிகரித்த ₹60 கோடி வருமானம் இரண்டாக, நுகர்விற்கும், சேமிப்பிற்கும் இடையே முறையே பிரிக்கின்றது (அதாவது ₹50 கோடி நுகர்வும், ₹10 கோடி சேமிப்புமாக)
- **கருத்துரை (3) :** வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வு மற்றும் சேமிப்பு அதிகரிக்கின்றது. நுகர்வோ சேமிப்போ குறையவில்லை.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**அட்டவணை: விதியின் மூன்று கருத்துரைகள்**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |




- இங்கே வருமானம் படுகிடை (x)- அச்சிலும், நுகர்வுச் சேமிப்பு செங்குத்து (y)- அச்சிலும் அளவிடப்படுகிறது. C – என்பது நுகர்வுச் சார்ப்பு வளைகோடு 45 – டிகிரி கோடு வருமானமும், நுகர்வும் சம அளவாக இருப்பதைக் காட்டுகிறது.

(அல்லது)

(ஆ)

| | தொன்மைக் கோட்பாடு | கீன்ஸ் கோட்பாடு |
|---|---|---|
| ■ | நீண்ட காலச் சமநிலை | குறுகிய காலச் சமநிலை |
| ■ | சேமிப்பு நல்லது | சேமிப்பு கெடுதல் |
| ■ | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் அணுகுமுறை. | நாட்டின் சிக்கல்களைத் தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை |
| ■ | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. | அரசுத் தலையீடு அனுமதிக்கப்படுகிறது. |
| ■ | முதலாளித்துவம் சரியானது. | முதலாளித்துவம் முரண்பாடுகளைக் கொண்டது. |
| ■ | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன்வைக்கப்படுகிறது. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது. |
| ■ | சேமிப்பு, முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| ■ | வட்டி வீதம் மாறாதது. | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது. |
| ■ | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது. |
| ■ | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**44.**

(அ) அ. **முதல்நிலைப் பணிகள் :**

- **பணம் ஓர் பரிமாற்றக் கருவியாக:** இது பணத்தின் அடிப்படை பணியாகும். பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது மேலும், இது அனைத்துப் பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம் பெறுகிறது.
- **பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக:** பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும். ஆகவே, பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது.

ஆ. **இரண்டாம் நிலைப் பணிகள் :**

- **பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலனாக:** பண்டங்களைச் சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது. ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின் பண்டங்களையும் பணிகளையும் சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன.
- **பணம் வருங்காலச் செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை :** பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாகச் செயல்படுகின்றது.
- **பணம் வாங்கும்திறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவியாக :** பொருளாதார வளர்ச்சியினை ஒட்டி பரிமாற்றம் விரிவடைந்து செல்கிறது.

இ. **துணைப்பணிகள் :**

- **கடனுக்கான அடிப்படை :** கடன் முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளில் உள்ள ரொக்க இருப்பின் அளவை பொருத்தே கடன்களை உருவாக்குகின்றன.
- **பணம் நாட்டு வருமானப் பங்கீட்டிற்கு உதவுகிறது :** பண்டமாற்று முறையில் நாட்டு வருமானப் பங்கீடானது மிகச்சிக்கலான ஒன்றாகும். ஆனால், பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி, இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை, அதாவது நாட்டு வருமானத்தை எளிதாகப் பகிர்ந்தளிக்க முடிகிறது.
- **இறுதிநிலைப் பயன்பாடுகளையும், இறுதி நிலை உற்பத்தித் திறன்களையும் சமன் செய்திட பணம் பயன்படுகிறது:** நுகர்வோர் தனது மொத்தப் பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தும் நோக்கில் தாம் நுகரும் பல்வேறு பண்டங்களின் இறுதிநிலைப் பயன்பாடுகளை பணத்தின் துணையுடன் சமப்படுத்த வேண்டியதாகிறது.
- **பணம் மூலதனத்தின் உற்பத்தித்திறனை உயர்த்துகிறது :** மூலதனம் பல்வகை வடிவங்களில் காணப்படுகிறது. பணம் நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும்.

ஈ. **இதர பணிகள் :**

- **திரும்பச் செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது :** பணம் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு சாதனமாகும். நிறுவனங்கள் தங்களின் செலுத்துதல்களை மேற்கொள்ள எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும்.
- **பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனைக் குறிக்கிறது :** எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக அந்த பணம் எனும் வாங்குதிறன் சேமித்து வைக்கப்பட்டதோ, அதை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.
- **பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையைத் தருகிறது :** பணம் என்பது நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். இதன் துணையுடன் அனைத்து இடு பொருட்களையும் வாங்குவதன் மூலம் எந்த ஒரு செய்பொருளையும் உற்பத்தி செய்ய இயலும்.

(அல்லது)

(ஆ)

| | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| ■ | ஒரு நாட்டிற்குள் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே நடைபெறும் வாணிகம் | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான வாணிகம் |
| ■ | உழைப்பு, மூலதனமும் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல் | உழைப்பும் மூலதனமும் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது. |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



| | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| ■ | பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை. | பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலை சுங்க வரி, பங்களவு முதலான தடைகள் கடினமாக்குகின்றன. |
| ■ | விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. |
| ■ | புவி அமைப்பும் கால நிலைச் சூழலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். | புவி அமைப்பும் கால நிலையும் வேறுபடும் இயல்பு கொண்டவை. |
| ■ | வாணிகமும், நிதி நடைமுறைகளும் ஒரே மாதிரியானவை. | வாணிகமும், நிதி நடைமுறைகளும் வேறுபடும் போக்குக் கொண்டவை. |
| ■ | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கை ஆகியவற்றில் வேறுபாடில்லை. | அரசமைப்பு முறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கை ஆகியவற்றில் வேறுபாடுகளிருக்கும். |

**45.**

(அ) **மக்களாட்சி முறைத்திட்டமிடலும் சர்வாதிகாரத் திட்டமிடலும் :**

- திட்டங்களை தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல்.
- சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாட்டின் படியும் வழிகாட்டுதலின் படியும் ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிமாற்றம், பகிர்வு ஆகிய அனைத்துமே அரசுக் கட்டுப்பாட்டிலிருக்கும்.

**மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலும் பரவ லாக்கப்பட்ட திட்டமிடலும் :**

- மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள், உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும். எனவே இதை ‘கீழிருந்து திட்டமிடல்’ எனவும் அழைக்கலாம்.

**வழிகாட்டும் திட்டமிடலும் தூண்டும் திட்டமிடலும்:**

- திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும்.
- திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளைப் பல்வேறு நிதியியல் வழிமுறைகள் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதே தூண்டும் திட்டமிடல் என்கிறோம்.

**சுட்டிக்காட்டும் திட்டமிடலும் கட்டாயமானத் திட்டமிடலும் :**

- திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளைக் குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் பிற துறை நிபுணர்கள் ஆகியோரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும்.
- கண்டிப்பான திட்டமிடல் முறையில், திட்டம் தயாரித்தலிலும் மற்றும் செயல்படுத்துதலிலும் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்விதத் தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்டகாலத் திட்டமிடல் :**

- ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகிய காலத் திட்டங்களாகும். ‘கட்டுப்படுத்தும் திட்டம்’, ‘ஆண்டுத் திட்டம்’ எனவும் அறியப்படுகிறது.
- மூன்றிலிருந்து ஏழு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும்.
- பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல். இவை முன்னோக்குத் திட்டங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**நிதித்திட்டமிடல், உருவப் பொருள் திட்டமிடல்:**

- திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்திட்டமிடலாகும்.
- உருவப்பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம், இயந்திரங்கள் முதலான பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

**பணிகள் திட்டமிடலும் கட்டமைப்புத் திட்டமிடலும்:**

- ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார, சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல், பணிகள் திட்டமிடலாகும்.
- பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும்.

**விரிவானத் திட்டமிடலும் பகுதித் திட்டமிடலும்:**

- நாட்டின் அனைத்துப் பொருளாதாரச் சிக்கல்களையும் தீர்பதற்கானத் திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும்.
- ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடையத் தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

(அல்லது)

(ஆ) பணவியல் கொள்கையானது பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு கருவியாகும்.

**பணத்தின் நடுநிலைத் தன்மை :**

- பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலை பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவர்.
- பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிப்படை காரணம் ஆகும்.
- பண நடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும், இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

**பரிமாற்றவீத நிலைத்தன்மை :**

- பரிமாற்றவீத நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையின் பாரம்பரியமான நோக்கமாகும்.
- எப்பொழுது ஒரு நாட்டின் அயல்நாட்டு வணிகச் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலை தோன்றுகிறதோ அப்பொழுது தங்கநகர்வின் காரணமாக அது தானாகவே சரி செய்து கொள்ளும்.
- எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது பணமும் கடனும் சுருங்குகிறது.
- செலுத்துச் சமநிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகள் தானாகவே சரி செய்யப்பட்டுப் பரிமாற்ற விகிதத்தில் நிலைத்தன்மை பேணப்படும்.

**விலை நிலைத்தன்மை :**

- பொருளியலாளர்கள் காஸல், கீன்சு முதலானவர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையில் முக்கியமான நோக்கமாகும் என்கின்றனர்.
- இது வணிக நடவடிக்கையை அதிகரித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும்.
- விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து இருப்பதோ அல்ல. ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும்.

**முழு வேலைவாய்ப்பு :**

- உலகப் பெருமந்தத்தின் பொழுது, வேலைவாய்ப்பின்மை மிக வேகமாக அதிகரித்தது.
- முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.
- மேலும் 1936–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு" எனும் கீன்சின் நூல் முழுவேலைவாய்ப்பு எனும் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பொருளாதார வளர்ச்சி :**

- பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும்.
- ஆகவே, சமநிலை பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு – முதலீடு ஆகிய சூழ்நிலைகளைப் பராமரித்து அதன் மூலம் நீடித்தப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது.

**அயல்நாட்டு செலுத்துச் சமநிலையில் சமநிலையைப் பேணுதல் :**

- செலுத்துச் சமநிலையில், சமநிலையைப் பேணுதல் என்பது பணவியல் கொள்கையின் அடுத்தக் குறிக்கோளாகும்.
- உலக வணிகம் சமனற்ற நிலையில் அதிகரித்ததால் வரும் அயல்நாட்டு செலாவணி சிக்கலாகும். இதன் காரணமாக செலுத்து சமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதின் திறனையும் குறைக்கும்.

**46.**

(அ) இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாகப் பண்டங்கள், பணிகள் வரி கொண்டு வரப்பட்டது. சரக்கு பணிகள் வரிச் சட்டம் பாராளுமன்றத்தில் 2017 மார்ச் 29இல் நிறைவேற்றப்பட்டு, 2017 ஜுலை 1 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. சுருங்கக்கூறின் பண்டங்கள், பணிகள் வரியானது பண்டங்கள், பணிகள் அளிப்பின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியாகும். நாடு முழுவதற்குமான ஒரே மறைமுக வரியாக GST உள்ளது.

**GST நன்மைகள் :**

- வரி மீதான வரி இம்முறையில் நீக்கப்படுவதால் பொருட்களுக்கான செலவு குறைகிறது.
- இது நேரிடையாக பண்டங்களின் செலவில் பிரதிபலிக்கிறது.
- GST எனப்படுவது தொழில்நுட்ப ரீதியில் அமைந்ததாகும் பதிவு செய்தல், வரித் தாக்கல் செய்தல் கூடுதலாகச் செலுத்தியதை திரும்பப் பெறுதல், கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்தல் போன்றவற்றை GST இணையத்தில் செய்யப்படுகிறது.
- இதனால் அனைத்துச் செயல்பாடுகளும் விரைவாக நடைபெறுகின்றன.

(அல்லது)

(ஆ) **நிலமாசுவிற்கான காரணங்கள் :**

- **காடுகளை அழித்தல் :** காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கியமான காரணியாக விளங்குகின்றது.
- **வேளாண்மை நடவடிக்கைகள் :** உழவர்கள் அதிக நச்சுத் தன்மை கொண்ட உரம், பூச்சி மருந்து ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் நிலம் நச்சுத் தன்மை அடைகின்றது.
- **சுரங்கத் தொழில்கள்:** கனிமங்களை வெட்டி எடுக்கும் போதும், சுரங்கங்கள் அமைக்கப்படும் போதும் நிலம் மாசு அடைகின்றது.
- **மண்ணில் புதைத்தல் :** ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ஆண்டிலும் டன் கணக்கில் குப்பையை உற்பத்தி செய்கின்றது. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிலத்தில் புதைக்கப்பட்டு நிலமாசு அதிரிக்கக் காரணமாக உள்ளது.
- **கட்டுமானப் பணிகள் :** மக்கள் தொகை வளர்ச்சி, நகர்ப்புறமாதல் ஆகியன காரணமாக கட்டடங்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. அதனால், மணல், மரம், கம்பி, சிமெண்ட், செங்கல், நெகிழிப் பண்டங்கள் ஆகியவற்றின் கழிவுகள் குப்பைகளாகப் புறநகர்ப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன. இதன் காரணமாக நிலம் மாசடைகின்றது.
- **அணுமின் கழிவுகள் :** அணுமின் நிலையங்களிலுள்ள கழிவுகளான கதிர்வீச்சுப் பண்டங்கள், நச்சுத் தன்மை கொண்ட தீமை விளைவிக்கும் வேதிப்பண்டங்கள் மனித நலத்தைப் பாதிக்கின்றது. இதன் மூலமும் நிலம் மாசுபடக் கூடும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**நில மாசுவுக்கு தீர்வுகள் :**

- மக்களுக்கு குறைத்தல், மறு சுழற்சி, மறு பயன்படுத்துதல் பற்றி உரிய அறிவினைப் புகட்டுகிறது.
- இயற்கையாகவே அழிந்து, மண்ணுக்கு சேதம் விளைவிக்காத பொருள்களைப் பயன்படுத்துவது.
- பூச்சிக்கொல்லி மருந்துகளைக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்.
- பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு மண் வளம் காத்தல், பயிர்ச் சுழற்சி முறை மண்ணின் வளத்தைக் கூட்டும் என்கிறார்கள்.
- தேவையில்லாத குப்பைகளை எரித்தோ அல்லது புதைத்தோ அப்புறப்படுத்துதல்.
- மிகக் குறைவான நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்துதல்.

**47.**

(அ)

| வ. எண் | தேவை X | விற்பனை Y | dx (A = 31) X – A (X – 31) | dy (B = 26) Y – B (Y – 26) | $dx^2$ | $dy^2$ | dxdy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23 | 18 | –8 | –8 | 64 | 64 | 64 |
| 2 | 27 | 22 | –4 | –4 | 16 | 16 | 16 |
| 3 | 28 | 23 | –3 | –3 | 9 | 9 | 9 |
| 4 | 29 | 24 | –2 | –2 | 4 | 4 | 4 |
| 5 | 30 | 25 | –1 | –1 | 1 | 1 | 1 |
| 6 | 31 | 26 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | 33 | 28 | 2 | 2 | 4 | 4 | 4 |
| 8 | 35 | 29 | 4 | 3 | 16 | 9 | 12 |
| 9 | 36 | 30 | 5 | 4 | 25 | 16 | 20 |
| 10 | 39 | 32 | 8 | 6 | 64 | 36 | 48 |
| | ∑X= 311 | ∑Y= 257 | ∑(X–A) = 1 | ∑(Y–B) = –3 | $\sum dx^2 = 203$ | $\sum dy^2 = 159$ | ∑dxdy = 178 |

$$\overline{X} = \frac{\sum X}{N} = \frac{311}{10} = 31\frac{1}{10}, \quad \boxed{A = 31} \qquad X - A \Rightarrow 31$$

$$\overline{Y} = \frac{\sum Y}{N} = \frac{257}{10} = 25\frac{7}{10}, \quad \boxed{B = 26} \qquad Y - B \Rightarrow 26$$

N = 10, ∑X = 311, ∑Y = 257

∑dx = (∑X– A) = 1, ∑dy = (∑Y – B) = –3, $\sum dx^2 = 203$

$\sum dy^2 = 159$, ∑dxdy = 178

$$r = \boxed{\frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}}$$

$$= \frac{10\times178 - (1)(-3)}{\sqrt{10\times203 - (1)^2}\sqrt{10\times159 - (-3)^2}}$$

$$= \frac{1780+3}{\sqrt{2030-1}\sqrt{1590-9}} = \frac{1783}{\sqrt{2029}\sqrt{1581}} = \frac{1783}{(45.044)(39.761)} = \frac{1783}{1790.94}$$

$$\boxed{\therefore r = 0.9955}$$

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(அல்லது)

(ஆ) **பொது நிதியியலின் பாடப்பொருள்/எல்லைகள் :**

- **பொது வருவாய் :** பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக்கூடிய முறைகளான வரி வருவாய்கள், வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரி விகிதம், வரிச்சுமை, வரியின் தாக்கம், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.
- **பொதுச் செலவு :** இப்பகுதி அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள், பொதுச் செலவைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

**பொதுக்கடன் :**

- பொதுக்கடன் என்ற பகுதியில் உள்நாடு, வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய கடன்களுக்கான வளங்களைப் பற்றி படிக்கிறது.
- பொதுக்கடன் சுமை, அதன் விளைவுகள், திரும்பச் செலுத்தும் முறை ஆகியவை இத்தலைப்பின் கீழ் வருகின்றன.

**நிதி நிருவாகம் :**

- இப்பகுதி அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி படிக்கிறது.
- வரவு செலவுத் திட்டம் என்பது ஓராண்டிற்கான அரசின் பேரளவு நிதித் திட்டமாகும்.
- வரவு செலவு திட்டத்தின் பல்வேறு நோக்கங்கள், அதனைத் தயாரிப்பதற்கான வழிமுறைகள், நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு, தணிக்கை முதலானவை நிதி நிருவாகத்தின் கீழ் வருகின்றன.

**நிதிக் கொள்கை :**

- வரிகள், மானியங்கள், பொதுக்கடன், பொதுச் செலவு ஆகியவை நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

❆❆❆❆❆

www.Padasalai.Net
www.surabooks.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com